# ஆழ்வார்கள் அருளிய தமிழ் அமுதம்

(ஸ்ரீ.உ.வே.Dr. இரா.அரங்கராஜன், M.A., Ph.D., மதுரை)

திருமகள்கேள்வனால் மயர்வறமதிநலம் அருளப்பெற்ற தமிழ்ப் பெருமக்களே ஆழ்வார்கள். அருளப்பெற்ற மதிநலத்தால் இறைவனுடைய எழில்நலத்திலும் அருட்பெருக்கிலும் ஆழ்ந்து மூழ்கினர். மூழ்கியது, ''மூனவன் மூவுலகாளி அப்பன் திருவருள் மூழ்கினளே'' (திருவாய்8–9–5) என்று அறியும்படியாயிருந்தது; ''ஈறில் இன்பத்து இருவெள்ளம் யான் மூழ்கினன்'' (திருவாய் 2–6–8) என்று உணர்த்தும்படியாயிருந்தது. எம்பெருமான் தன்னுடைய நீலமேனிஎழிலைத் தானே காட்டக்கண்ட ஆழ்வார்கள் அழகுணர்ச்சியில் ஆழமூழ்கிச் சோகித்தும் மோஹித்தும் தெளிந்தும் இறையருட்செயல்களை நுகர்ந்தனர்; அந்நுகர்ச்சி உள்ளடங்காது புறம்பொசிந்து சொல்மாலைகளாக வெளிப்பட்டன. பக்திஅபிநிவேசம் வழிந்து புறப்பட்ட சொற்கள் என்றும் ஈரச்சொற்கள் என்றும் செவிக்கினிய செஞ்சொற்கள் என்றும் வைஷ்ணவ ஆசார்யர்கள் போற்றிப்பரவும்படியாய் அமைந்தன.

''தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல்மாலைகள் சொன்னேன்'' என்று நம்மாழ்வார் தம்முடைய சொற்களைத் தமிழ் அமுதமாகவே வர்ணிக்கிறார். ஆரா அமுதனைப் பாடியதால் அவ்வாறு தமிழ் அமுதமாயிற்று. அவ் ஆராவமுது ஆழ்வாரின் உடலையும் உள்ளத்தையும் நீராய் அலைந்து கரைய உருக்கியது. ''என்அமுதினைக்கண்டகண்கள் மற்றொன்றினைக்காணவே'' என்று பாண்பெருமாளின் உள்ளத்தை வேறு ஒன்றிற்சொல்லாதபடி ஈர்த்துக்கொண்டது.

ஆழ்வார்களின் அநுபவம் மொழிபட்டோடும் கவியமுதமாகியது. தேவர்களின் அமுதம் பிறவித்தளையை அறுக்காது; பந்தகமாம். ஆழ்வார்களின் கவியமுதம் பந்தமறுப்பதோர் மருந்தாகிப் பரந்தாமனின் திருவடிக்கீழ்ச் சேர்ப்பிக்கும் திறன் வாய்ந்ததாம். இறைவனே ஆழ்வாருடைய தண்டமிழ்க் கவியமுதத்தை ஆரப்பருகினன்.

பூதத்தாழ்வார் ஞானச்சுடர் விளக்கேற்றி ஞானத்தமிழ் புரிந்தார். தாம்பெற்ற பெரும்பேற்றினைப் பெருமிதத்தோடு பேசுகிறார்.

யானேதவம்செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானேதவமுடையேன் எம்பெருமான்–யானே
இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது. (இரண்டாம் திருவ 74)

என்றதும் திருவேங்கடவனுக்கு ஓர் ஆசை பிறந்தது. ''வானோராகிய நித்யஸூரிகள் தெய்வ மலர்களால் மாலை தொடுத்து அதனைச் சுமந்து வந்து நீர் சுடர் தூபம் கொண்டு சந்தி செய்ய வருவார்கள்; அவர்கள் வருவதற்கு முன்

ஆழ்வாருடைய வாடாத தமிழ் மாலையை அணிந்து கொள்ளவேண்டும்'' என்று மிக்க ஆதரத்துடன் பூதத்தாழ்வாரை நோக்கி, ''பெருந்தமிழன் என்று பெருமை பேசும் ஆழ்வீர்! எம்மை ஒரு கவி பாடும்'' என்று கையேந்தினன். அப்போது ஆழ்வார் பாடிய பாசுரம் கேண்மின்;

பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருகண் இளமூங்கில் வாங்கி – அருகிருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர்
வான் கலந்த வண்ணன் வரை. (இரண்டாம் திருவ 75)

மலைநாட்டுக் கானகத்திலே பிடியும் களிறுமாக இணைந்து வாழ்ந்த யானை தம்பதிகளில், பெண்யானை கருவுற்றது. கருவுற்றமனைவிக்கு வாய்க்கு இனிதாகத் தின்னும் ஆசை எழுந்தது. யானைக்கு மூங்கில் என்றால் பிடிக்கும். மலைநாட்டுக் கானகத்தில் எங்கும் முற்றிய மூங்கில்களே பணைத்துப் பரவியிருந்தன. அதையா தின்னக்கொடுப்பது? ஆண்யானை ஆலோசித்துப்பார்த்தது. மதத்தைப் பெருக்கும் அந்த யானை தன் காதலியின் அன்பில் கட்டுண்டது. மனைவியின் கையைப்பிடித்துக்கொண்டு இனியதாய் நன்கு இளையதான மூங்கில் புதர்களை தேடிப்புறப்பட்டது.

ஒருசிறப்புமற்ற ஸாதாரண மலைகளில் முளைத்த மூங்கில்கள் என்றால் அந்தப் பெண்யானைக்குப் பிடிக்காதாம். தேவன் உறைகின்ற திருமலைகளில் முளைத்தெழுந்ததாக இருக்கவேண்டுமாம். அதையறிந்த ஆண்யானை வானமாமலை, திருக்குறுங்குடிமலை, திருமாலிருஞ்சோலைமலை, திருமெய்யமலை, திருநீர்மலை என்று ஒவ்வொரு மலையாகச் சென்று இறுதியில் திருவேங்கட மலைக்குத் தன் மனைவியோடு போய்ச் சேர்ந்தது; வேங்கடமாமலை உச்சியையும் அடைந்தது. அங்கே, எதிர்பார்த்த மூங்கில் கிடைத்துவிட்டது. மதம்பெருக நிற்கும் அக்களிறு தன் பெண்யானை முன் அடங்கி நிற்கிறது. அதனைத்தன் கையாளாக்கி ஏவல் கொள்ளும் பெருமிதம் பெண்யானைக்கு! ''நான் உனக்குச் செய்யவேண்டுவது என்?'' என்று ஏவிய செயலைச் செய்வதற்குக் காத்து நின்றது ஆண்யானை. பெண்யானை கண்ணால் காட்டியது. அருகேயிருந்த புதரில் மிகவும் இளையதாய் இரண்டு கணுக்களே வளர்ந்திருந்த மூங்கில் குருத்தைக் கருத்துடன் பறிந்தது. அதை அப்படியே பிடிக்குக் கொடுக்கலாமா? அருகிருந்த சுனையைப் பார்த்தது; மூங்கிலை வளைத்தவேகத்தில் நுனியில் கட்டியிருந்த தேன்கூடு சிதைந்து தேன் ஒழுகிச் சுனைநீரில் கலந்தது. இருகண்இளமூங்கிலை அந்தச்சுனையில் தேங்கியதேனில் கலந்து பெண்யானைக்குக் கையுறையாக நீட்டியது. நம்பெருமாளுக்குத் திருமஞ்சன ஸமயத்தில் எடுத்துக்கைநீட்ட அபிஷேக த்ரவ்யங்கள் ஸித்தமாயிருக்குமாபோலே, சுனையும் தேனும் நீரும் அருகே அமைந்துள்ளனவாம். அபிஷேக த்ரவ்யங்களை திருப்பணி செய்வோர்

பணிவோடு ஸமர்ப்பிக்குமாபோலே, பெருகுமதவேழம் இருகண் இளமூங்கிலை அருகிருந்த தேன்கலந்து ஸமர்ப்பிக்கிறதாம். யானைகளுக்கிடையே இத்தகைய அன்பு தோன்றுவதற்குக்காரணம் திருமலையின் மண்வாசனையாம். அந்த நிலமிதியே தாம்பத்ய ஸம்பந்தத்தை பிணித்து வளர்க்கிறதாம். அதற்குக் காரணம் அம்மலையின் உச்சியில் எழுந்தருளியிருக்கும் திருவேங்கடவனுடைய ப்ரணயித்வகுணமாகும். பிராட்டியினிடம் காதல்பூண்டு அவளுக்குத் தன் திருமார்பினையே இருப்பிடமாகக் கொடுக்க, அவளோ ''அகலகில்லேன் இறையும்'' (திருவாய் 6–10–10) என்று அவனுடைய திருமார்பை விட்டுஅகலாது உறைகிறாள். இவ்வாறு இணைபிரியாத திவ்யதம்பதிகள் வாழும் திருமலையாதலால், ஆங்குச் செல்லும் விலங்குகளிடத்தும் காதற்பண்பு தானாகவே பொருந்துகிறது. இவ்வாறு வான் கலந்த வண்ணனும் திருமாலின் திருமலை விளங்குகிறது.

கவிபாடச் சொன்ன கடவுளைப் பாடாது அவன் உறைகின்ற திருமலையைப் பாடிய ஆழ்வார் இறுதியில் அம்மலைக்குரியோனையும் ஒருவாறு புகழ்ந்தார். ''வான் கலந்த வண்ணன்'' என்பது ஆழ்வாருடைய புகழுரை. ''மூங்கில் குருத்தும் தேனும் கலந்தாற்போலேயாயிற்று மேகமும் அவன் திருநிறமும் கலந்திருக்கும்படி'' என்பது பேருரையாளரான நம்பிள்ளையின் விரிவுரை. வண்ணம் என்பது தன்மையையும் குறிக்கும். அப்போது மேகத்தின் பண்பு கலந்த ஸ்வபாவம் என்று இறைவனுடைய வரையாது வழங்கும் கொடைப் புகழைக் காட்டுகிறது; கைம்மாறு வேண்டாது வழங்கும் க்ருபைச் சிறப்பைக் காட்டுகிறது. மேலும் ''மேகம் எனக் களிறு சேரும்'' என்பதால் திருமாலாகிய இறைவனே ஒரு களிறு போன்று திருமலையில் நின்கிறான் என்பதும் அதனால் ஸஜாதீயமான யானைகள் நெருங்கி அணுகத்தக்கவன் என்பதும் குறிப்பால் உணர்த்தப்படுகின்றன.

இவ்வரிய கவிதையை இனிய கவிக்கு ஓர் எடுத்துக்காட்டாக நம்பிள்ளை திருவாய்மொழி ஈட்டில் விளக்கியிருக்கிறார்.

இன்கவிபாடும் பரமகவிகளால்
தன்கவிதான் தன்னைப் பாடுவியாது– இன்று
நன்குவந்து என்னுடனாக்கி என்னால் தன்னை
வன்கவிபாடும் என் வைகுந்தநாதனே (திருவாய் 7–9–6)

என்ற பாசுரத்தில் ''இன்கவிபாடும் பரமகவிகள்'' என்று முதலாழ்வார்களைக் குறிப்பதாகவும், இன்கவி என்பது பூதத்தாழ்வார் பாசுரத்தைக் குறிப்பதாகவும் நம்பிள்ளை விளக்கியிருக்கிறார்.

''பெருகுமதவேழம்'' என்ற பாசுரம் சொல்நயம், பொருள்நயம், குறிப்புநயம் இவற்றுடன் உருக்காட்சியும் பொருந்தி தொக்குக்களைந்த

பலாச்சுளை போலும் இனியதாய்த் தமிழ்க்கவியமுதமாய்த் திகழ்கிறது. மேலும் இக்கவியில் பிற்காலத்து வரலாற்றுச் செய்தியும் உள்ளுறைந்து நிற்கிறது. ஸ்வாமிராமாநுசர் திருமலைசென்று பெரியதிருமலைநம்பி பக்கல் ஸ்ரீராமாயணத்தைப் பாடம் கேட்டார். அவ்வாசார்யர் த்வயம் என்கிற மந்த்ரரத்நத்தை ஸ்ரீராமாயணம் என்கிற தேனிற்குழைத்து உபதேசித்தார். த்வயம் என்கிற மந்த்ரம் இரண்டு தொடர்புகளையுடையது. ஆதலின் இருகண் இளமூங்கிலாகவும் பொருந்துகிறது; மந்திரத்தையுபதேசிக்கும் ஆசார்யன் களிறு; உபதேச பாத்ரமான சிஷ்யன் பிடியானை என்று கொள்ளலாம்.

ஆழ்வார்களுக்கு இறையருள் நுகர்ச்சியை முதன்முன்னம் எழுப்பியது இறைமைப் பண்புகளே. ''உயர்வற உயர்நலம் உடையவன்'' என்று நம்மாழ்வாரைச் சொல்லுவித்தது இறைவனுடைய பண்புநலன்களேயாகும். ''இவர்தாம் மூற்பட குணங்களிலே இழிவானேன் என்னில், தாம் அகப்பட்ட துறை அதுவாகையாலே இவரை குணத்தையிட்டாயிற்று வணக்குவித்தது'' என்பர் நம்பிள்ளை. ஆழ்வார் தாமும் உடனே ''தொழுதெழு என் மனனே'' என்று வணங்கத் தொடங்கினர். இவ்வாறு வணங்க மூற்பட்ட ஆழ்வாரைக் கவிபாடும்படி தூண்டியது யாது? என்பதனை ஆழ்வாரே அருளிச்செய்கிறார்.

என்றைக்கும் என்னை உய்யக்கொண்டுபோகிய
அன்றைக்கன்றென்னைத் தன்னாக்கி என்னால் தன்னை
இன்தமிழ் பாடிய ஈசனை ஆதியாய்
நின்றஎன் சோதியை என்சொல்லி நிற்பனோ (திருவாய் 7–9–1)

''இன்தமிழ்பாடிய ஈசனை ஆதியாய் நின்ற என் சோதியை'' என்று ஆழ்வார் அரிய செய்தியை அருளிச்செய்கிறார். 'இன்தமிழ்' என்பது திருவாய்மொழி. ஆழ்வாரை அடிபணிந்து தேவுமற்றறியேன் என்ற மதுரகவியாழ்வார் திருவாய்மொழியை ஏடுபடுத்திப் பட்டோலை கொண்டவர். அவருடைய திருவாக்கு, ''அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினான்'' என்பது. இதிலிருந்து ''இன்தமிழ்'' என்பது திருவாய்மொழி என்பதும் அதை அருளியவர் தண்டமிழ்ச்சடகோபன் என்பதும் தெளிவாகிறது அல்லவா! ஆனால் சடகோபரோ திருவாய்மொழியை ஸர்வேச்வரனே பாடியதாகத் தெரிவிக்கிறார். அதுமட்டுமன்றி, ஆழ்வார் கவிபாடுகைக்கு ஆதியாக நின்றவனும் அவனே என்கிறார். எவ்வாறு ஆதியாக நின்றான் என்பதை ''என்சோதியை'' என்ற பதச்சேர்த்தியால் வெளிப்படுத்துகிறார். இறைவன் கவிக்கு ஆதியாக நின்றபடியைப் பேருரையாளரான நம்பிள்ளை அற்புதமாக விரித்துரைக்கிறார். கேண்மின்; ''பிடாத்தை விழவிட்டுத் தன் வடிவழகைக்காட்டினான். திருத்திரை எடுத்தால் கூப்பிடுமா போலக் கூப்பிட்டேன். அது கவியாய்த் தலைக்கட்டிற்று'' என்று ஆழ்வார்க்குக் கருத்தாக அவர் கூறுகின்ற பாங்கில் விளக்குகிறார்

நம்பிள்ளை. ஆழ்வார்க்கு முன்பே தன்னை மூடிமுக்காடிட்டு வந்துநின்றான் இறைவன்; ஆழ்வார் கையெடுத்ததும் முக்காட்டை முன் விலக்கித் தன் எழிலார் சோதியை வெளிப்படுத்தினான். அவ்வெழில் வெள்ளத்தில் அகப்பட்ட ஆழ்வார் மகிழ்ச்சிப் பெருக்கினால் கோஷமிட்டார். அந்த கோஷம் தமிழ்க்கவிதையாய் மிளிர்ந்தது. திருக்கோயில்களில் திரையை விலக்கி தீபவொளி காட்டியதும் எம்பெருமானுடைய திருமுகமண்டலச் சோதியை தரிசித்த பாமரமக்கள் உணர்ச்சிப்பெருக்கால் உந்தப்பெற்று இறைவனுடைய திருநாமங்களை உச்சஸ்வரத்தில் கோஷிப்பது போன்றிருந்ததாம் ஆழ்வார் பாடிய பாசுரங்கள். ''வடிவழகைக் காட்டியாயிற்றுக் கவிக்கு உள்ளூறை கொடுத்தது'' என்று அழகுணர்ச்சியே கவிதையின் தூண்டுகோல் என்பது நம்பிள்ளையின் கவிதைக் கோட்பாடு.

இனி, இன்தமிழாகிய திருவாய்மொழியை மதுரகவிகளின் கருத்தைக் கொண்டு ஆழ்வாரே பாடியதாகக் கொள்வதா? அல்லது ஆழ்வாரின் திருவாக்கைக்கொண்டு திருமாலே பாடியதாகக் கொள்வதா? என்றால் அதற்கும் ஆழ்வாரே ஸமாதானம் சொல்லுகிறார்.

ஆமுதல்வன் இவன் என்று தன் தேற்றி, என்
நாமுதல் வந்து புகுந்து நல்லின்கவி
தூமுதல் பத்தர்க்குத்தான் தன்னைச் சொன்ன, என்
வாய்முதல் அப்பனை என்று மறப்பனோ. (திருவாய் 7–9–3)

தம்மைக் கருவியாகக் கொண்டு திருவாய்மொழியாகிய இன்தமிழ் பாடியவன் ''என்வாய்முதலப்பன்'' என்கிறார். என்ன அழகான திருநாமம் சூட்டுகிறார்! என்வாய்முதலப்பன் – எனக்கு வாய்த்தவனாய், கவிபாடுவதற்கு முதற்காரணமாயிருந்து உபகாரம் செய்தவன் என்று நன்றியோடு நவில்கிறார். அவனே பாட, தாம் வாய் அசைத்த உணர்வைப் புலப்படுத்துகிறார்.

இவ்வாறு ஆழ்வாரின் நினைவிற் புகுந்து நல்லின் கவிகளைப் பாடிய ஈசன் எங்கே உறைகின்றவன்? என்று கேட்கத் தோன்றுகிறது அல்லவா? அவன் வைகுந்தவான் நாட்டில் வாழ்கின்றவன் அல்லன்; பாற்கடலுள் பையத்துயின்ற பரமன் அல்லன்; கோசலை குமரனும் அல்லன்; தேவகிதன் சிறுவனும் அல்லன்; தமர் உகந்த திருவுருவத்தையும் தமர் உகந்த திருநாமத்தையும் கொண்டு தானுகந்த ஊரெல்லாம் திருக்கோயில்கொண்டு பின்னானார் வணங்கும் சோதியாய்த் திகழும் அர்ச்சாமூர்த்தியே அவன் என்கிறார் ஆழ்வார். இனி நூற்றெட்டுத் திருப்பதிகளில் அவன் எங்கே உறைகின்றான் எனில், ஆழ்வாரையே கேட்போம்;

நண்ணா அசுரர் நலிவெய்த நல்ல அமரர் பொலிவெய்த
எண்ணாதனகள் எண்ணும் நன்முனிவர் இன்பம் தலைசிறப்பப்
பண்ணார் பாடல் இன்கவிகள் யானாய்த் தன்னைத் தான்பாடி
தென்னா என்னும் என் அம்மான் திருமாலிருஞ்சோலையானே. (திருவாய் 10–7–5)

என்று ஆழ்வாருடைய ஸமாதானம் திருமாலிருஞ்சோலையில் உறைகின்ற பிராணுகிய அழகரே ஆழ்வார் திருவாக்கில் புகுந்து கவிபாடியவர் என்று தெரிகிறது.

இவ்வாறு இன்தமிழ் பாடிய ஈசனும் திருமால் தமிழ்க்கடவுள்; அவனுடைய திருமேனியில் தமிழ்மணம் கமழ்கிறது; ஆழ்வாருடைய தமிழ் மாலையை – சங்கத்தமிழ்மாலையைப் புனைந்து கொண்ட திருமால் திருவரங்கத்துள் அரவணைமேல் பள்ளிகொண்டிருக்கிருன். திருமங்கையாழ்வாரும், குலசேகரப் பெருமாளும் அவ்வாறு கண்டு உலகிற்கு உணர்த்தியிருக்கிருர்கள்.

இந்திரற்கும் பிரமற்கும் முதல்வன்தன்னை இருநிலம்கால்தீநீர்விண்பூதமைந்தாய்
செந்நிறத்த தமிழோசை வடசொல்லாகித் திசை நான்குமாய்த் திங்கள் ஞாயிருகி
அந்தரத்தில் தேவர்க்கும் அறியலாகா அந்தணனை அந்தணர் மாட்டு அந்திவைத்த
மந்திரத்தை மந்திரத்தால் மறவாது என்றும் வாழுதியேல் வாழலாம் மடநெஞ்சமே

என்பது திருமங்கைமன்னனுடைய திருவாக்கு. இறைவன் [(திருநெடு.4) செந்நிறத்த தமிழ் ஓசையாகவும், வடசொல்லாகவும் விளங்குகிருன். செந்நிறத்த தமிழ் ஓசை பண்சுமந்த பாடலான திருவாய்மொழியையும், வடசொல் அதற்கு நிகரான ஸ்ரீராமாயணத்தையும் குறிக்கும் என்பர் பெரியவாச்சான்பிள்ளை. இவ்வாறு தமிழ்மணம் கமழும் திருமாலைப் பொதுவாக ''அந்தரத்தில் தேவர்க்கும் அறியலாகா அந்தணன்'' என்று கூறியிருப்பினும், அதற்கு விளக்கமளிப்பது போல் மற்ருெருபாசுரத்தில் ''அளப்பரிய ஆரமுதை அரங்கமேய அந்தணனை'' என்று பாடியுள்ளார். இதற்கு மூலமாக முந்துறவே அவ்வாறு அருளிச்செய்து வெளியிட்டவர் குலசேகராழ்வார்.

மாவினைவாய்பிளந்துகந்தமாலை வேலை வண்ணனை என்கண்ணனை வன்குன்றமேந்தி
ஆவினை அன்றுய்யக்கொண்ட ஆயரேற்றை அமரர்கள்தந்தலைவனை அந்தமிழின்பப்
பாவினை அவ்வடமொழியைப் பற்றற்ருர்கள் பயிலரங்கத்தரவணையிற் பள்ளி
கோவினை நாவுறவழுத்தி என்தன்கைகள் கொய்ம்மலர் தூஉய் என்று [கொள்ளும்
[கொலோ கூப்புநாளே.

திருவரங்கத்தில் பள்ளிகொண்டபெருமாளை அந்தமிழ் இன்பப்பா என்று ஸாமாநாதிகரண்யத்தாற் பேசுகிருர். அதாவது அவன் வேறு, அந்தமிழ் இன்பப்பா வேறு அன்று. அந்தமிழ் இன்பப்பா என்பது பொதுவான தமிழ்ப்பாக் களைக் குறிப்பதோடன்றி அவற்றுள் சிறந்து நிற்கும் திருவாய்மொழியைக் கருதும் என்று அழகியமணவாளப்பெருமாள்நாயனுர் அபிப்ராயப்படுகிருர். ''இன்பமாரியில் ஆராய்ச்சி வீட்டின்ப இன்பப்பாக்களில் த்ரவ்ய பாஷா நிரூபண ஸமம்'' என்ற ஆசார்யஹ்ருதய ஸூத்திரத்தில் இன்பமாரி என்று நம்மாழ்வாரை யும், இன்பப்பா என்று அவர் அருளிச்செய்த திருவாய்மொழியையும், வீட்டின்பம் என்று திருவாய்மொழியின் உட்பொருளான அர்ச்சா ரூபமான திருமேனியையும் அவர் பெயரிட்டழைக்கிருர்.

இனி, தமிழ்மணம் கமழும் திருமாலைப் போற்றிப் பரவுதற்குரிய மொழியும் தமிழே என்பதும் தமிழ்ச் சான்றோர்களான ஆழ்வார்களுடைய கருத்து என்று ஆசார்யப்பெருமக்கள் உணர்த்தியிருக்கின்றனர்.

திருப்புளிங்குடியில் திருமால் பள்ளிகொள்கிறான்; அவனுடைய இருப்பழகைக் காணஅவாவிய ஆழ்வார், எம்பெருமானை நோக்கி ஒரு பாசுரத்தை விண்ணப்பம் செய்கிறார்;

எங்கள் கண்முகப்பே உலகர்கள் எல்லாம் இணையடி தொழுது எழுதிறைஞ்சி
தங்கள் அன்பாரத்தமதுசொல்வலத்தால் தலைத்தலைச்சிறந்துபூசிப்பத்
திங்கள்சேர்மாடத் திருப்புளிங்குடியாய்! திருவைகுந்தத்துள்ளாய் தேவா
இங்கண் மாஞாலத்து இதனுளும் ஒருநாள் இருந்திடாய் வீற்றிடங்கொண்டே.

''எங்கள் கண் முகப்பில் உலகர்கள் எல்லாம் தேவரீருடைய திருவடிகளைத் தொழுது எழுந்து இறைஞ்சித் தங்களுடைய அன்பு நிறையத் தமது சொல்வலத்தால் ஒவ்வொருவராகப் பூசிக்கும்படி ஒரு நாள் எழுந்திருந்து வீற்றிருக்கவேண்டும்'' என்று பிரார்த்திக்கிறார். இங்கே சொல்வலத்தால் பூசிப்பதாவது, ''அவரவர் சொல்லவல்ல அளவுகளில் ஏத்துவது'' என்று பொருள். சொற்களில் வன்மை தமிழ்மொழியில்தான் அமையும் என்பது ஆழ்வாருடைய அபிப்ராயம். ஏனெனில் அவ்வாறு புகழ்பவர் கற்றறிந்த பண்டிதரல்லர், உலகர்கள் என்று ஸாமாந்ய ஜனங்களையே ஆழ்வார் குறிப்பிடு வதால் அவர்கள் பாமரமக்களே என்பது தெளிவாகிறது அல்லவா? இதனை மேலும் தெளிவாக்க, உரையாசிரியர் நிகழ்ச்சியொன்றைக் குறிப்பிடுகிறார்.

திருவரங்கபெருமாளாகிய நம்பெருமாள் ஓர் உற்சவத்தில் திருவோலக் கமாக எழுந்தருளியிருக்கிறார். கோஷ்டியில் முதலியாண்டான் ஸ்ரீராமாநுஜ சிஷ்யர் – முன்னிற்கிறார். அவர் அருகில் கூரத்தாழ்வான், எம்பார் போன்ற பெரியோர்கள் நிற்க, அவர்களருகில் வேதவேதாந்த விற்பன்னர்களான அந்தணர்கள் அணிசெய்து காத்திருக்க; அவர்கள் எதிர்வரிசையில் அபலைகளான பெண்கள், அதிலும் நம்பெருமாளைக் காணவந்த ஆய்ச்சிமார்கள் நின்று கொண்டிருந்தனர்.

அப்போது வங்கிபுரத்துநம்பி என்ற ஆசார்யர் பெருமாளைச் சேவிக்க எழுந்தருளினர். எழுந்தருளியதும் இடைச்சிகளான சிறுபெண்பிள்ளைகள் அருகில் இடம்பிடித்து நின்றார். அதனை முதலியாண்டான் கண்டு அவரை யழைத்து, ''அடியார்களான ஆடவர்கள் இருக்கப் பெண்பிள்ளைகள் பக்கம் நின்றது ஏன்?'' என்று கேட்டார். ''நம் பக்கலில் சிறிதாகிலும் செருக்குகள் கிடக்கும். கல்விச்செருக்கு, குலச்செருக்கு, செல்வச்செருக்குகள் இன்னும் கிடக்கின்றனவே. அவர்கள் ஒன்றும் அறியாத சிறுமியர். ஆதலால் இறைவன் அருளுக்கு அவர்கள் பள்ளமடையாக இருப்பார்கள், நம்பெருமாள் திருவருட்பெருக்கு வேர்களை நோக்கியே பாய்ந்து செல்லா நிற்பதைக்கண்டேன்.

அவர்கள் அருகில் நின்றேன்'' என்று நம்பி விடையிறுத்தார்.

அதனைத்தொடர்ந்து முதலியாண்டான் ''அப்படியாகில், அவர்கள் சொன்னது ஏது? நீர் சொன்னது ஏது? என்று கேட்டார். ''பாலுண்பீர், பழமுண்பீர், பொன்னாலே பூணூல் இடுவீர், நூறுபிராயம் புகுவீர், அழுத்த இரட்டை உடுப்பீர்'' என்று அவர்கள் சொன்ன வார்த்தைகள். ''விஜயஸ்வ, விஜயீபவ'' என்று நான் சொன்ன வார்த்தை'' என்றார் வங்கிபுரத்து நம்பி. உடனே முதலியாண்டான் அவரைக்குறித்து ''அங்கேபோயும் முரட்டு ஸம்ஸ்க்ருதத்தை விட்டீரில்லையே! எங்கே இருந்தாலும் நாம் நாம் தாங்காணும், இங்கே எழுந்தருள்வீர்'' என்று அறிவுறுத்தினாராம்.

இதனால் பழகு தமிழில் பரவுகின்ற பாமர மக்களின் வார்த்தைகளில் சொல்வளம் நிறைந்திருக்கும் என்பது புலப்படுத்தப்பட்டிருக்கிறது.

திருமாலிருஞ்சோலைமலை குறிஞ்சி நிலமாகும்; குறிஞ்சி மக்களான குறவர்கள் புனங்களில் முற்றிய தினைக்கதிர்களைப் பொறுக்கி அவியுணவாகச் சமைத்து அதனைத் திருமாலிருஞ்சோலை அழகருக்குப் புதியதாகப் படைக்கிறார் கள். அப்போது அவர்கள் பழகு தமிழில் பரம்பொருளைப் பரவிய திறத்தினைப் பெரியாழ்வார் பாசுரமிட்டுச் சொல்கிறார் கேண்மின்;

உனக்குப் பணி செய்திருக்கும் தவமுடையேன் இனிப்போய் ஒருவன்
தனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கை நின் சாயை அழிவு கண்டாய்
புனத்தினை கிள்ளிப் புது அவிகாட்டி உன் பொன்னடி வாழ்க என்று
இனக்குறவர் புதியதுண்ணும் எழில்மாலிருஞ்சோலை எந்தாய்.(பெரியாழ் திரு 5–3–3)

''உன் சேவடி செவ்வித்திருக்காப்பு'' என்பது பரமவைதிரான பெரியாழ்வாரின் பாசுரம். ''உன்பொன்னடி வாழ்க'' என்பது பாமரமக்களான குறவர்களின் பாசுரம். அப்பாசுரத்தை அதன் கௌரவம் கருதிய பெரியாழ்வார் அவர்கள் வார்த்தைக்கு இடம் கொடுத்துப் பாடியுள்ளார்.

ஆழ்வார்களுடைய அமுதத்தமிழில் இயற்கை பூத்துக் குலுங்குகிறது; கற்பனைவளம் பெருகுகிறது; உவமை உயர்ந்து நிற்கிறது. அதனால் இலக்கியத்திறன் செறிந்து நிற்கிறது. இறைவனைப்புகழ்வதோடு நின்றிருந்தால், வடமொழிப் புராணங்களில் இடம்பெறும் பீஷ்மஸ்துதி, குந்திஸ்துதி போன்று இலக்கியச்சுவை குன்றியிருக்கும். ஸம்ஸ்க்ருத அஷ்டோத்தரசதநாம ஸ்தோத்ரங்கள் போல் பாராயண க்ரந்தமாகக் கணக்கிடப்பட்டிருக்கும். ஆழ்வார்கள் பாசுரங்களுக்கு விஷயம் திவ்யதேசம். வைரமோதிரத்தை வெல்வெட் பெட்டியிற் பொருத்திக் காட்டுவதுபோல், இறைவன் தன்னை திவ்யதேசங்களில் வைத்து ஆழ்வார்களுக்குக் காட்சியளித்தான். திவ்யதேசத்தைச் சூழ்ந்த முதற்பொருளோடும் கருப்பொருளோடும் எம்பெருமான் ஆழ்வார்களின் அகத்தே புகுந்தான்.

திருக்கடித்தானத்தில் உறைகின்ற அற்புதநாராயணன் நம்மாழ்வாருடைய நெஞ்சகத்தில் கோயில்கொண்டான்; திருக்கடித்தானத்தைக் கோயிலாகக் கொண்ட எம்பெருமான் அவ்வாறு இடம் கொண்டபோது திருக்கடித்தானம் என்ற திவ்யதேசத்தோடு சேர்ந்து புகுந்தான்.

கோயில்கொண்டான் தன் திருக்கடித்தானத்தை
கோயில்கொண்டான் அதனேடும் என் நெஞ்சகம்
கோயில்கொள் தெய்வமெல்லாம் தொழ வைகுந்தன்
கோயில்கொண்ட குடக்கூத்த அம்மானே. (திருவாய் 8–6–5)

என்று ஆழ்வார் தம்முடைய அநுபவத்தைப் பாசுரமிட்டுப் பேசுகிருர்.

திவ்யதேசத்தைச் சுற்றுமுள்ள மரங்களும், செடிகளும், கொடிகளும், புற்பூண்டுகளும், கழனிகளும், கால்வாய்களும், ஆறுகளும், தடாகங்களும், தடம்பூம்சுனைகளும், அருவிகளும், அலைநீர்க்கடலும், கழிகளும், மலையும், மடுக்களும், விலங்குகளும் பறவைகளும் ஆழ்வார் பாசுரங்களில் தெய்வத் தன்மை எய்தின. மலைநாட்டுத் திருப்புலியூரில் வளர்கின்ற கமுகு மரத்தை ''திருவருட்கமுகு'' என்று ஆழ்வார் புனைந்துரைக்கிருர். புனைந்துரை போன்ற மெய்யுரையாகும். திருப்புலியூர் எம்பெருமானும் எம்பெருமாட்டியும் தம்முடைய திருக்கண்களால் திருவருள் செய்ய, அதனையே விளைநீராகக் கொண்டு வளர்ந்த கமுகாதலின் ''திருவருட்கமுகு'' என்று சிறப்பிக்கிருர். ''திருவருட்கமுகு என்று சிலவுண்டு; அதாவது நீராலே வளருகையன்றிக்கே பிராட்டிமாரும் ஸர்வேஸ்வரனுமாகக் கடாக்ஷிக்க அத்தால் வளருவன சில'' என்று நம்பிள்ளை அருளிச்செய்வர்.

ஆழ்வார்களில் திருமங்கைமன்னன் திவ்யதேசங்களின் இயற்கைச் செல்வங்களையும், செயற்கைச் செய்திகளையும் நயம்படவுரைத்துக் கண்முன்னே நிறுத்துகிருர்.

திருமங்கையாழ்வார் புள்ளம்பூதங்குடி என்னும் திவ்யதேசத்தை நோக்கிச்செல்கிருர். அதுதான், மாவலியை வஞ்சித்து மூவுலகத்தையும் அளந்து கொண்டவனும் முதலைவாய்ப்பட்ட யானையின் துயரத்தைத் தீர்த்தவனுமான புனிதன் எழுந்தருளியிருக்கும் இடம். அவனைக் காண,விரைந்து செல்லும் ஆழ்வார் பழனங்கள் சூழ்ந்த கழனிகளின் வழியாகப் போகிருர். கழனிகளைப் பார்க்கிருர். நீர் நிறைந்து தேங்கியிருக்கிறது. பள்ளமான சேற்றுநிலத்தில் கயல்மீன்களையும் காண்கிருர். அவை செருக்கு மிகுந்து துள்ளுகின்றன; ஒன்றின் மீது மற்றென்று நெருக்கி உகள்கின்றன. அங்கே ஒரு நாரை மீன்களைத் தேடுகின்ற காட்சியும் ஆழ்வார் கண்களுக்குப்படுகிறது. இவ்வளவும் புள்ளம்பூதங்குடிக்கு அழகுசெய்யும் இயற்கைக்காட்சியாக அமைந்து ஆழ்வார் பாசுரத்தில் இலக்கியமாக இடம்பெறுகிறது.

கள்ளக்குறளாய் மாவலியை வஞ்சித்து உலகம் கைப்படுத்து
பொள்ளைக் கரத்த போதகத்தின் துன்பம்தவிர்த்த புனிதனிடம்
பள்ளச்செறுவில் கயலுகளப் பழனக்கழனி அதனுட்போய்
புள்ளுப்பிள்ளைக்கு இரைதேடும் புள்ளம்பூதங்குடிதானே. (பெரியதிரு 5–1–2)

ஆலவாயுடையான் என்பான் ஒருதமிழ்ப்புலவன் இப்பாசுரத்தை ஓதியபோது ஓர்ஐயம் தோன்றவே, பராசரபட்டர் என்ற ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யரிடம் வந்து ' ''பள்ளச்செறுவில் கயல் உகள'' என்றபோதே அவ்விடத்து வயல்களில் மீன்கள் அளவற்றுக் கிடக்கின்றமை சொல்லியாயிற்று. அப்படியிருக்க ஈற்றடியில் புள்ளுப்பிள்ளைக்கிரை தேடும் என்று எங்ஙனே சொல்லாம்? மீன் அருமைப்பட்டுச் சிலவாக இருந்தாலன்றோ இரையைத் தேடிப்பார்க்க வேண்டும்? கொள்வார் தேட்டமாம்படி குறையற்றுக்கிடக்கும்போது தேடிப் பிடிப்பதாகச் சொல்வது எப்படிப்பொருந்தும்' என்று கேட்டான். இதற்குபட்டர் அருளிச்செய்ததாவது, ''பிள்ளாய்! நீ கற்றவனுயினும் சொற்போக்கு அறிய வில்லை. 'பிள்ளைக்கு இரைதேடும்' என்று ஆழ்வார் கூறுகிருர். அங்குள்ள மீன்கள் நிலச்செழிப்பாலே ஒவ்வொன்றும் தூண்போல் தடித்திருக்கும். அவை பறவைக் குஞ்சுகளின் வாய்க்குக் கொள்ளாது. ஆகையால் சிறிய மீன்களைத் தேடிப் பிடிக்கிறதாம் தாய்ப்பறவை. திருமங்கையாழ்வார் தாய்ப்பறவையின் செயலை உற்றுநோக்கி உணர்ந்து பாடியிருக்கிருர். இந்த இயற்கை வருணனையிலும் அரியதோர் உண்மை உள்ளுறையாக இருப்பதையும் ஆசார்யர்கள் காட்டுகின்றனர். தாய்ப்பறவை உபதேசிப்பவரான ஆசார்யரையும், பிள்ளைப்பறவை உபதேசம் பெறுபவரான சிஷ்யரையும் குறித்து நிற்கின்றன. பறவைக்கு இரண்டு சிறகுகள் போன்று, ஆசார்யருக்கும் ஞானம், அநுஷ்டாநம் என்பன இரண்டு பக்ஷங்கள். ஞானமனுட்டானமிவை நன்ருகவே உடையனை குரு தன்னைச் சாரும் சிஷ்யனுடைய பக்குவம் நோக்கி எளிதான மூதுமொழிகளைச் செவியறிவுறுத்தும் பாங்கு இங்கே இயற்கைக் காட்சியாக விழுந்துள்ளது.

திருமங்கையாழ்வார் புள்ளம்பூதங்குடித் திருமாலை வணங்கி வழிபட்டு, அங்கிருந்து திருநறையூர் நம்பியைக் காணப்புறப்படுகிருர். ஊரை நெருங்கும் போது சோலைகள் ஆழ்வாருடைய திருக்கண்களை ஈர்க்கின்றன. சோலைக்குள் ஆழ்வார் நுழைகிருர். மலர்கள் செறிந்துள்ளன. வண்டு ஒன்று மலருக்குள் புகுந்து கழுத்துக்கொள்ளும் அளவுக்கு கள்ளைக்குடித்து மகிழ்ச்சிப் பெருக்கால் ஆலத்திப் பண்ணைப்பாடி மயங்குகிறது. அப்போது ஒருதென்றல் சோலைக்குள் வீசி அலர்களைத் தூற்றியது. நன்கு பூத்த ஓர்முல்லை தென்றலின் செயலைக்கண்டு சிரித்ததாம். ஆழ்வார் இவற்றை எல்லாம் சொல்லோவியமாகப் புனைந்து காட்டுகிருர்.

ஒளியாவெண்ணெய் உண்டான் என்று உரலோடாய்ச்சி ஒண்கயிற்ருல்
விளியா ஆர்க்க ஆப்புண்டு விம்மி அழுதான் மென்மலர்மேல்

களியா வண்டு கள்ளுண்ணக் காமர் தென்றல் அலர் தூற்ற
நளிர்வாய் முல்லை முறுவலிக்கும் நறையூர் நின்ற நம்பியே. (பெரிய திரு 6–7–4)
வண்டு கள்ளைக் குடிக்க, தென்றல் அலர்தூற்ற, முல்லை முறுவலிக்கும் நேர்த்தியையும் சொல்லாட்சிகளையும் உற்றுணர்ந்த பெரியவாச்சான்பிள்ளை கூறுகிறார்.

''கண்டவிடமெங்கும் பரப்புமாறப் பூத்துக்கிடக்குமிறே; அதிலே மதுபானத்திற்காகக் கிட்டின வண்டுகள், அத்தைக்கிட்டப்பெற்ற மகிழ்ச்சியாலே களித்து, இழிவான செயலைச்செய்வாரைப்போலே மதுபானத்தைப் பண்ணின. அத்தைக் கண்ட அழகிய தென்றல் நாட்டிலே பழியைத் தூற்றியது. அத்தைக் கண்ட முல்லை அதுதான் அப்படிச்செய்கிறது; இதுதான் இப்படிச்செய்யக் கடவதோ? என்று வாய்விட்டுச் சிரிக்காது புன்முறுவல் பண்ணிற்று''. நல்லொழுக்கம் வாய்ந்த ஒருவன் ஏதோ விதிவசத்தால் மதுபானம் பண்ணிவிட்டான் என்றும்; அதைக்கண்ட மற்றொருவன் ஊரிலே பழிதூற்றப் புறப்பட்டான் என்றும்; இவ்விரண்டையும் கண்ட பெரியவர் ஒருவர் ''ஏதோ விதிவசத்தால் ஒருகால் மதுபானம் பண்ணிவிட்டால், அதுகுறித்து இப்படியும் ஒருவன் பழிதூற்றவேண்டுமா? இவ்விருள்தருமாஞாலத்தில் இது ஸகஜந்தானே என்று மௌனமாயிருக்கலாகாதோ என்று வாய்விட்டுச் சிரிக்கமாட்டாமல் இவை என்ன உலகியற்கை என்று புன்சிரிப்புச் செய்கிறார்'' என்கிறார்; இந்த வருணனையின் உள்ளுறையை மகான்கள் உணர்த்தியிருக்கின்றனர். அலர்தூற்ற என்ற தொடரில் அலர் என்பது மலரையும் பழிச்சொல்லையும் குறிப்பதால் இவ்வரிய உள்ளுறை புலப்படுகிறது.

திருமங்கையாழ்வார் சோலைகளைக் கடந்து வயல் வரப்புகளில் நடக்கத் தொடங்கினார். வரப்பின் இரு புறங்களையும் காண்கிறார். அப்போது பொழுது புலரும் ஸமயம். தாமரை மலர்கள் வாய் நெகிழ்ந்தன; ஆம்பல் மலர்கள் வாய்கூம்பின. தாமரை மலரின் இதழ்களைத் திறந்துகொண்டு ஆண் நண்டுகள் புறப்பட்டன. ஆம்பல் மலர்களை நெருங்கியதும் அவற்றின் இதழ்கள் மூடிக்கொண்டன. உள்ளே வாழ்கின்ற பெண்நண்டுகளைச் சேரமுடியாது தவித்தன. இதனை ஆழ்வார் பாசுரமிடுகிறார்.

பள்ளிக் கமலத்திடைப்பட்ட பகுவாய் அலவன் முகம்நோக்கி
நள்ளியூடும் வயல் சூழ்ந்த நறையூர் நின்ற நம்பியே (பெரிய.திரு6–7–6)

அலவன் என்று ஆண் நண்டுக்குப் பெயர்; நள்ளி என்று பெண் நண்டிற்குப் பெயர். தாமரை மலரில் சிறைப்பட்டிருந்து வந்து சேர்ந்த ஆண்நண்டினிடத்திலே பெண்நண்டு ப்ரணயரோஷத்தில் ஊடுவதாக மூலத்திலுள்ளது. இந்த ஊடலுக்குக் காரணத்தை ''முகம்நோக்கி'' என்ற சொற்களால் நுட்பமாக உணர்த்துகிறார் ஆழ்வார். அந்த நுட்பத்தை பராசரபட்டர் விரித்து உணர்த்துகிறார்.

ஓர்ஆம்பல் மலரில் ஆணும்பெண்ணுமாக நண்டுகள் இரண்டு வாழ்ந்தன. பெண் நண்டு கருவுற்றது. அதற்கு இனிய வஸ்துக்களை கொண்டுவர, ஆண் நண்டு புறப்பட்டது. தாமரையின் மகரந்தம் இனிமையும் நறுமணமும் கொண்டதாகையால், மெல்ல நகர்ந்து தாமரைப் பூவிலே சென்று சேர்ந்தது. அவ்வளவில் சூரியன் அஸ்தமித்தது. தாமரையின் இதழ்கள் மூடிக்கொண்டன. ஆண்நண்டு சிறைப்பட்டு விட்டது. வெளியே புறப்படமுடியாது இரவெல்லாம் உள்ளே புரண்டு கிடந்தது. பொழுது விடிந்ததும் தாமரைமலர் விரிந்தது; ஆண் நண்டு உடம்பெல்லாம் மகரந்த தாது அணிசெய்ய மணம் நிறைந்து தன் மனைவியைக் காண ஆம்பலுக்கு விரைந்தது. ஆம்பல் மலர் இதழ்களைக் குவித்துக்கொண்டது. இதனைப்பார்த்தால், ஆண் இரவில் வேறிடத்துத் தங்கிவந்தபடியாலும் உடம்பிலே வண்ணப்பூச்சுகள் பட்டிருந்தபடியாலும் ப்ரணயரோஷத்தால் ஊடி,கதவை அடைத்துக் கொண்டது என்று தோன்றுகிறது அல்லவா?

இப்பொருளை, பட்டர் அருளிச்செய்தபோது பிள்ளைத்திருநறையூர் அரையர் என்ற பெரியார், ''விசாரணை செய்யாது குற்றத்தைத் நிச்சயித்து தண்டனை செய்யலாமோ? என்று கேட்டாராம்; அதற்கு பராசரபட்டர் இன்சுவைமிக்க பதிலைக்கூறினர். ''நாம் என் செய்வது? கேள்வியில்லாத படி பெண்ணரசு நாடாயிற்றே!'' என்று. அதாவது திருநறையூர்க்கு நாச்சியார் கோயில் என்ற பிரசித்தி இன்றைக்கும் உள்ளது. அங்கு நாச்சியாருக்கே எல்லாவற்றிலும் முதன்மை அளிக்கப்படுகிறது. திருவீதிப்புறப்பாடுகளில் நாச்சியார் முன்னே எழுந்தருளப் பெருமான் பின்னே எழுந்தருள்வர். ஆணரசு நாடாகில் கேட்பாருண்டு; பெண்ணரசு நாடாகையாலே கேட்பாரில்லை என்பது இன்சுவையான வார்த்தை.

இவ்வாறு ஆழ்வார்கள் அருளிய பக்திப்பெருக்கில் இலக்கிய விருந்தும் படைக்கப்பட்டிருக்கிறது. ஆழ்வார்களில் தமிழ் அமுதப்பெருக்கு இலக்கியச் சுவைஞர்களுக்கும், இன்னிசைச் கலைஞர்களுக்கும், பக்திப் பெரும் செல்வர்களுக்கும் பொதுவான அமுதவாறு.

பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும் ஆயிரம்

என்று நம்மாழ்வார் திருவாய்மொழிபற்றிக் கூறுகிறர். தமிழாற் பரவிய திருமாலைக் குறிக்கும் போதும்,

பண்ணுளாய் கவிதன்னுளாய் பத்தியினுள்ளாய் பரமீசனே வந்து என்
கண்ணுளாய் நெஞ்சுளாய் சொல்லுளாய் என்று சொல்லாயே (திருவாய் 7–1–6) என்பதால் திருமால் பண்ணிலேயும், கவிதன்னிலேயும், பக்தி நிறைந்த உள்ளத்திலேயும் உறைகின்றன் என்று ஆழ்வார் உணர்த்துகிறர்.

************